கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 07.07.2012

தேனீ
10 வருடங்கள்
22.02.2002 22.02.2011

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newswow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (56)

### 56. இடதுசாரி ஓடுகாலிகளைப் புலிகள் வைத்திருந்த இடம்!

வேறு இன்னும் சிலரிடமும் எனது விடுதலை சம்பந்தமாக எனது மனைவி சென்று உதவி கோரினார். அவர்களில் ஒருவர் அ.கௌரிகாந்தன் (காந்தன்). அவரும் நான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் அங்கு கல்வி கற்றதுடன், என்னையும் நா.யோகேந்திரநாதனையும் (அவரும் அங்குதான் கல்வி கற்றாhர்) போல, படிப்பை இடையில் துறந்துவிட்டு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர ஊழியராகச் சேர்ந்தவர்தான்.

நாங்கள் மூவருமே 1966 ஜனவரி முதல் முழுநேர ஊழியர்களாகச் செயற்படத் தொடங்கினோம். நான் கிளிநொச்சிப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தேன். எனது சொந்த ஊரான முகாவில் (இயக்கச்சி) கிளிநொச்சிப் பிரதேசத்தில் அடங்கியிருந்ததே அதற்கான காரணம். யோகேந்திரநாதன் ஒரு வருடம் சுன்னாகத்தில் கட்சிக் காரியாலயம் எடுத்து அங்கு செயல்பட்டுவிட்டுப் பின்னர் கிளிநொச்சிப் பகுதிக்கு வந்து சேர்ந்தார். கௌரிகாந்தன் வவுனியாப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தார். அதற்குக் காரணம் வவுனியா பூவரசங்குளத்தைச் சேர்ந்த வி.பரம்சோதி என்ற ஒரு தோழர் எம்முடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்றதனால், அவருடைய தொடர்பைப் பயன்படுத்தி கௌரிகாந்தன் வவுனியாவைத் தேர்ந்தெடுத்தார்.

ஆனால் 1971ல் ஜே.வி.பியின் முதலாவது கிளர்ச்சி ஏற்படுவதற்கு முன்னரே, அதாவது 1969 வாக்கில் கௌரிகாந்தன் தோழர் காமினி யாப்பா (விமல் ரணசிங்க) அமைத்திருந்த 'கீழைக்காற்று இயக்க'த்தில் சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்திருந்தார். இந்த காமினி யாப்பா என்பவர் எமது கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும், கண்டி மாவட்டச் செயலாளராகவும் இருந்தவர். சிறிது காலம் கட்சியின் 'கம்கறுவா' என்னும் சிங்களப் பத்திரிகைக்கு காமினி யாப்பா ஆசிரியராகவும் இருந்தவர். அக்காலகட்டத்தில் கட்சியின் வேலை முறைகள் குறித்தும், கட்சிப் பொதுச்செயலாளர் நா.சண்முகதாசனின் நடைமுறைகள் குறித்தும் விமர்சனங்களை முன்வைத்ததால், சண்முகதாசன் குழுவினரால் காமினி யாப்பா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அதன்பின்னர் அவரும், கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட இன்னொருவரான ஹிங்குரான்கற்றவைச் சேர்ந்த தோழர் விமல் விஜயக்கூன் என்பவரும் சேர்ந்து கீழைக்காற்று இயக்கம் என்ற அமைப்பை உருவாக்கி வேலைசெய்யத் தொடங்கினர்.


ஆனால் கௌரிகாந்தன் அவர்களுடனும் நீடித்து இருக்கவில்லை. அந்த இயக்கத்தின் அதிதீவிர இடதுசாரிப் போக்குகளால் அவ்வியக்கம் அடக்குமுறைக்குள்ளாகி, பல நெருக்கடிகளைச் சந்தித்து ஸ்தம்பித நிலையை அடைந்த காலகட்டத்தில், தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்து, தமிழ் இளைஞர்களின் சட்ட விரோதப் போராட்டங்கள் எழுச்சியடைந்து கொண்டிருந்தன. எனவே கௌரிகாந்தன் கீழைக்காற்று இயக்கத்திலிருந்து வெளியேறி புளொட் இயக்கத்தில் இணைந்து 'சுப்பையா மாஸ்டர்' என்ற பெயருடன் வேலை செய்யத் தொடங்கினார். அந்த இயக்கத்தில் ஒரு கட்டத்தில் டி.சிவராமும், கௌரிகாந்தனும் அந்த இயக்கத்தின் தத்துவ ஆசிரியர்கள் போலச் செயற்பட்டார்கள். அசோக் (யோகன் கண்ணமுத்து) தளத்தில் முக்கியமானவராக இருந்த காலத்தில் நடைபெற்ற தள மாநாட்டின் போது, டி.சிவராம், அ.கௌரிகாந்தன், வ.ஐ.ச.ஜெயபாலன் ஆகியோர் தமிழ்நாட்டிலிருந்து வந்து பிரமுகர்களாக ஓடித்திரிந்ததைப் பலர் அறிவர்.

இருந்தும் கௌரிகாந்தன் புளொட்டிலும் அதிககாலம் நீடிக்கவில்லை. பின்னர் கீழைக்காற்று இயக்கத்தில் தன்னுடன் முன்பு ஒன்றாக வேலைசெய்த மூர்த்தி (தமிழ் செல்வனின் அண்ணன்) என்பவர் புலிகளின் அரசியல் பொறுப்பாளராக இருந்ததைப் பயன்படுத்தி, புலிகளுடன் இணைந்து வேலைசெய்யத் தொடங்கினார். ஆனால் அங்கு அவர் முன்வைத்த வேலைத்திட்டங்களைப் புலிகள் ஏற்காததுடன், அவர்மீது சந்தேகமும் கொள்ளத் தொடங்கினர். அவர் புலிகளால் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டதுடன், அவரது நடமாட்டத்தையும் அவர்கள் கட்டுப்படுத்தி, அவரை 'வீட்டுக்கைதி' போல வைத்தனர். அதிலிருந்து ஒருவாறு மீண்ட கௌரிகாந்தன், குடும்பத்துடன் இந்தியாவுக்கு 'ஓடித்' தப்பினார். இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி அங்கு அவர் ஈ.என்.டி.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து வேலை செய்வதாகத் தெரிய வந்தது. ஆனால் அண்மையில் கிடைத்த புதிய தகவல் ஒன்றின்படி அந்த இயக்கத்திலும் அவர் இல்லை எனத் தெரிகிறது.

இந்த கௌரிகாந்தன் புலிகளுடன் இணைந்திருந்த காலத்தில், அவர்கள் மாணவர்களுக்கென ஆரம்பித்து நடாத்திய 'சாளரம்' என்ற மாத சஞ்சிகையின் ஆசிரிய குழுவில்; சிறிதுகாலம் பணியாற்றினார். அப்பொழுதுதான் எனது விடுதலை சம்பந்தமாக மனைவி அவரிடமும் சென்றார். ஆனால் அவரால் எனது விடுதலை சம்பந்தமாக ஒரு சிறு துரும்பைத் தன்னும் தூக்கிப் போட முடியாது என்பது எனது மனைவிக்குத் தெரிந்திருக்கவில்லை என்றாலும் எனக்குத் தெரியும்.

எனது மனைவி அணுகிய இன்னொருவர் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த மு.பாஸ்கரகுமார் ஆகும். 'சின்னண்ணை' என நான் எப்பொழுதும் அழைக்கும் அவரிடம் எனது மனைவி சென்றதிற்குக் காரணம், நான் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கற்ற மூன்று வருட காலமும் அவரது வீட்டில் தங்கியிருந்தே கல்வி கற்றேன். பின்னர் அவர் புலிகள் இயக்கத்தில் ஒரு முக்கிய பிரமுகராக இருந்ததுடன், புலிகள் நீர்வேலிப் பகுதியில் அமைத்திருந்த மிகப்பெரிய நிலக்கீழ் பதுங்கு குழி சம்பந்தமான சில பொறுப்புகளையும் வகித்து வந்தார்.

அவர்களது வீடு கந்தரோடையில் முன்னாள் உடுவில் - மானிப்பாய் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த வி.தர்மலிங்கம் (என்னுடன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஒரே வகுப்பில் பயின்ற புளொட் தலைவர் சித்தார்த்தனின் தந்தையார்) அவர்களின் வீட்டுக்கு நேர் எதிரில் அமைந்துள்ளது. தர்மலிங்கம் அவர்களின் குடும்பமும் பாஸ்கரனின் குடும்பமும் மிக நெருங்கிய உறவினர்கள். அதனால் பாஸ்கரனின் குடும்பத்தினர் தீவிர தமிழரசுக்கட்சி விசுவாசிகளாக இருந்த போதிலும், என்மீது அவர்கள் எல்லோரும் தமது குடும்ப அங்கத்தினர்களில் ஒருவன் போலப் பற்றும் பாசமம் வைத்திருந்தனர். பாஸ்கரன் எனது மனைவியிடம் சில வாக்குறுதிகளை வழங்கினாராயினும் அவராலும் பெரிதாக எதையும் செய்துவிட முடியவில்லை.



அதுமாத்திரமல்ல, நான் விடுதலையாகி வந்த பின்னர் அவரைச் சந்திப்பதற்காக கந்தரோடையிலிருந்த அவரது வீட்டுக்குச் சென்ற போது, அவரைப் புலிகள் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை அவரது மனைவி எனக்குச் சொன்னார். அப்பொழுது புலிகள் இயக்கத்தில் அதன் தலைவர் பிரபாகரனுக்கும் பிரதித் தலைவர் மாத்தையாவுக்கும் இடையிலான முரண்பாடு உச்சக்கட்டத்தை அடைந்து, மாத்தையாவையும் அவரது சகாக்களையும் பிரபாகரன் கைதுசெய்து வைத்திருந்த காலம். அவ்வாறான சிலர் எம்முடனும் சிறை வைக்கப்பட்டிருந்தனர். மாத்தையாவின் நெருங்கிய ஆதரவாளர்கள் மட்டுமின்றி, அவருடன் பழகியவர்கள் சிலரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அப்படியானவர்களில் இந்த பாஸ்கரனும் ஒருவர். சில மாதங்களின் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டுவிட்டார்.

எனது விடுதலைக்கு தானாகவே முயற்சி எடுத்ததாகப் பின்னர் என்னிடம் தெரிவித்தவர்களில் ஒருவர் நா.யோகேந்திரநாதன். முன்பு எமது கட்சியில் என்னுடன் கிளிநொச்சிப் பிரதேசத்தில் ஒன்றாக வேலை செய்த அவர், 1971 ஜே.வி.பி கிளர்ச்சியின் பின்னர் எமது கட்சியிலிருந்து விலகி, அந்தக் காலகட்டத்தில் கிளிநொச்சித் தொகுதிக்கான சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருந்த அமைச்சர் செல்லையா குமாரசூரியருடன் இணைந்து வேலை செய்தார்.

பின்னர் தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் உதயமானதும் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயல்படத் தொடங்கினார்.



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-1)
பரீசில் பரிதிமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம் (பகுதி-2)
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (1)
றொபேட் பிளேக், தயவுசெய்து ஸ்ரீலங்கா மக்களுக்குப் பதில் சொல்லுங்கள் (2)

அவர் கிளிநொச்சியிலிருந்து புலிகள் சில காலம் வெளியிட்ட 'ஈழநாதம்' பத்திரிகைக்கு ஆசிரியராக மாத்தையாவால் நியமிக்கப்பட்டதுடன், அவர்களது கலை பண்பாட்டுக் கழகத்திலும் இணைந்து செயற்பட்டார். மாத்தையா வன்னியிலிருந்து செயற்பட்ட காலத்தில் அவருடன் மிக நெருங்கிய தொடர்புகளைப் பேணி வந்தார். அந்தத் தொடர்பை வைத்துக்கொண்டு எனது விடுதலை சம்பந்தமாக மாத்தையுடன் தான் கதைத்ததாகவும், எனது உயிருக்கு எந்தவித ஆபத்தும் இல்லையெனவும், ஒரு குறிப்பிட்ட தண்டனைக் காலத்தின் பின்னர் நான் விடுதலை செய்யப்படுவேன் என மாத்தையா தன்னிடம் தெரிவித்ததாகவும், நான் விடுதலையாகி வந்தபின்னர் யோகேந்திரநாதன் என்னிடம் தெரிவித்தார்.


ஈழநாதம்

உண்மையில் இவர்களில் சிலரோ அல்லது எல்லோருமாகவோ எனது விடுதலைக்காக ஒரு சிறு முயற்சியைத் தன்னும் எடுத்திருந்தால், நான் அவர்களுக்காக இன்றும்கூட நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் புலிகள் இயக்கத்தினால் குறி வைக்கப்படுபவர்கள் குறித்து வெளியில் உள்ளவர்கள் மட்டுமின்றி, அவர்கள் இயக்கத்தில் செல்வாக்கான நிலையில் இருப்பவர்கள் கூட பேசுவது என்பது தற்கொலைக்கொப்பானதாகும். அத்துடன் எமது கட்சியிலிருந்து புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டவர்களைப் புலிகளின் தலைமை எவ்வாறு வைத்திருந்தது என்பதும் எனக்குத் தெரியும். அதற்கு ஓர் உதாரணம்தான் 1995ல் புலிகள் வன்னிக்கு இராணுவத்தால் துரத்தப்பட்ட போது, அவர்களது கலை பண்பாட்டுத்துறைப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அங்கு வீடு எடுக்க முடியாது திண்டாடிய அவலம்.

புலிகளைப் பொறுத்தவரை, அவர்களது அதிகார அடுக்கில் சர்வ வல்லமை பொருந்திய நபர் 'தேசியத் தலைவர்' பிரபாகரன் தான். அதற்கடுத்த அதிகார மையம் அவர்களது புலனாய்வுப் பிரிவு. அதற்கடுத்தது அவர்களது இராணுவம். இவை தவிர அரசியற்பிரிவு, கலை பண்பாட்டுப் பிரிவு என்பதெல்லாம் புலிகளின் தலைமை செய்துவந்த மனித குலத்துக்கு விரோதமான செயல்களுக்கு வெள்ளை அடிப்பதற்காகவே உருவாக்கப்பட்டவையாகும். அதிலும் அவற்றில் இடதுசாரி இயக்கத்தில் இருந்து சென்றவர்கள் பொறுப்பில் இருந்தால் சொல்லத் தேவையில்லை. ஹிட்லரின் காலத்திலும் சில இடதுசாரி ஓடுகாலிகள் அவனுடைய அரசியல் - பிரச்சாரப் பிரிவுகளில் இணைந்து வேலை செய்த வரலாறு உண்டு.

எனவே எனது விடுதலை சம்பந்தமாக எனது மனைவி தனது ஆதங்கத்தினால் முயற்சிகள் எடுத்த போதிலும், பலத்த சித்திரவதைகளுக்குப் பின்னர் அவர்கள் எனக்கு வழங்கிய தண்டனைக் காலம் முழுவதையும் அனுபவித்த பின்னரே நான் விடுதலை செய்யப்பட்டேன் என்பதே உண்மையாகும். இன்று புலிகள் முற்றுமுழுதாக இலங்கை மண்ணில் அழிக்கப்பட்டு, அவர்களில் பல்லாயிரக்கணக்கானோர் அரச படைகளிடம் சரணடைந்த நிலையில், அவர்களுக்கு அரசாங்கம் புனர்வாழ்வளித்து படிப்படியாக விடுதலை செய்து வருகின்ற நிலையிலும் கூட, அவர்களை எவ்வித விசாரணையும் இன்றி முழுவதுமாக உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் எனக் கோருகின்ற இலங்கையிலுள்ள சில அரசியல்வாதிகளையும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளையும் பார்க்கையில், கால் நூற்றாண்டு காலமாக புலிகளின் பாசிச இராணுவச் சப்பாத்துகளின் கீழ் தமிழ் மக்கள் நசுக்கப்பட்ட போது இவர்கள் எல்லோரும் எங்கே போனார்கள் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

தொடரும்